கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண். 398/2017 வா.சா. 1 விஜயகுமார்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 22.07.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

4) க.ச.எண்.282/1 காலைக்கு நாராயணசாமி பெயரில் பட்டா இருந்தது என்றால் சரியல்ல. அவ்வாறு எனில் அந்த காலைக்கு யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் எனக்கு தெரியவில்லை. அவ்வாறு எனில் நாராயணசாமி பெயரில் இருந்தது சரியல்ல என நான் மறுத்ததும் தெரியாமல்தான் கூறியுள்ளேன் என்றால் தெரியவில்லை.

5) க.ச.எண்.282/2 காலை சுப்பேக்கவுண்டர் பெயரில் பட்டா இருந்தது என்றால் தெரியவில்லை. க.ச.எண்.282/2 காலையை சுப்பேக்கவுண்டர் அனுபவித்து வந்தார் என்றால் தெரியவில்லை. க.ச.எண்.282/4 காலை என் தகப்பனார் கண்ணுசாமிகவுண்டர் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். க.ச.எண்.282/3 என்ற காலை நாராயணசாமி, சுப்பேக்கவுண்டர் மற்றும் கண்ணுசாமிகவுண்டர் ஆகிய மூவர் பெயரிலும் கூட்டுப்பட்டாவாக இருந்த கிணறு என்றால் சரிதான்.

6) மேற்கண்டவாறு சொத்துக்கள் உட்பிரிவு செய்து அனுபவிக்கப்பட்டு வந்த நிலையில் அச்சொத்துக்களை அளவுகளில் ஏற்றத்தாழ்வுகள் இருந்ததால் கடந்த 26.03.2012 அன்று மீண்டும் வருவாய் துறையினரால் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மறு உட்பிரிவுக்கு பின் கடந்த 13.07.2012 அன்று சுப்பேக்கவுண்டரும் அவரது மக்களும் க.ச.எண்.282/2 ஏ மற்றும் 282/1பி ஆகிய

சொத்துக்கள் பொறுத்து அரவிந்தன் என்பவருக்கு ஒரு பொது அதிகார பத்திரம் ஏற்படுத்தினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பொது அதிகாரத்தின் அடிப்படையில் மேற்படி அரவிந்தன் முகவராக செயல்பட்டு க.ச.எண்.282/2 ஏ-ல் 3 ஏக்கர் 46 செண்ட் பூமியும் மற்றும் க.ச.எண். 282/1 பி-ல் 1 ஏக்கர் 54 செண்ட் பூமியும் 2 1/2 செண்ட் தட பூமியுமாக மொத்தம் 5 ஏக்கர் 2 1/2 செண்ட் பூமியை 1ம் பிரதிவாதிக்கு கடந்த 13.07.2012 அன்றே கிரையம் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரைய தேதியில் இருந்தே மேற்படி கிரைய சொத்துக்களின் அனுபவத்தை 1ம் பிரதிவாதிதான் இருந்து வருகிறார் என்றால் தெரியாது.

7) வழக்கு சொத்தில் யார் சுவாதீனத்தில் இருக்கிறார்கள் என்றால் நான்தான் சுவாதீனத்தில் இருக்கிறேன். அவ்வாறு எனில் என் பக்கத்து பூமி யார் சுவாதீனத்தில் உள்ளது எனக்கு தெரியாதா என்றால் தெரியாது. நான் தெரிந்துக்கொண்டே வழக்கிற்காக வேண்டும் என்றே பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் பெரியப்பா சுப்பேக்கவுண்டர் பூமியைதான் 1ம் பிரதிவாதி செல்வராஜ் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். என் பெரியப்பா பூமியை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுவிட்டார் என்ற பொறாமையில் அவரை அதனை அனுபவிக்கவிடாமல் இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. என் பூமிக்கும், 1ம் பிரதிவாதி பூமிக்கும் இடையே எல்லை கற்கள் உள்ளனவா என்றால் சரியான இடத்தில் உள்ளன. வழக்கு தாக்கல் செய்தபிறகு நான் மேற்படி எல்லைக்கற்களை அகற்றிவிட்டேன் என்றால் சரியல்ல.

8) எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையிலான பிரச்சினையானது மேற்படி

பூமிகளுக்கு இடையிலான பூமிகள் பிரச்சினை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சொத்து என் சொத்திற்கு எத்திசையில் உள்ளது என்றால் எனது க.ச.எண்.282/2 பி சொத்துக்கு மேல்புறம் 1ம் பிரதிவாதியின் சொத்து அமைந்துள்ளது. அவ்வாறு எனில் 1ம் பிரதிவாதியின் சொத்து எங்குள்ளது என்று எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு எனில் 1ம் பிரதிவாதியின் சொத்து எங்குள்ளது என்று தெரியாமலையே என் சொத்திற்கு மேல்புறம் இருப்பதாக கூறுகிறேனா என்றால் கேள்வி தவறு.

9) 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்தபிறகு அவரின் மனுவின்பேரில் நீதிமன்ற ஆணையர் நில அளவையர் உதவியுடன் வழக்கு சொத்துக்களை பார்வையிட்டு அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். ( **நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் முறையே நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). (**நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் உள்ள வட்ட சார் ஆய்வாளர் வரைபடம் நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) நீ.ம.சா.ஆ.3 வரைபடத்தில் வட்ட சார் ஆய்வாளர் புல எண் 282/1 பி2 பி, அ.பதிவேடு சிட்டா ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள பரப்பைவிட குறைவாக இருப்பதாகவும் நீதிமன்ற ஆணையர் புலத்தில் கோரிய அளவுகள் கணிப்பிற்கு அதிகமாக உள்ளதாகவும் கண்டுள்ளார் என்றால் அளவையர் கண்டுள்ள விபரம் தவறு. நீ.ம.சா.ஆ.3 வரைபடத்தில் வட்ட சார் ஆய்வாளர் புல எண் 282/2 ஏ 2 சி, அ.பதிவேடு சிட்டா ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள பரப்பு சரியாக இருப்பதாகவும் நீதிமன்ற ஆணையர் புலத்தில் கோரிய அளவுகள் கணிப்பிற்கு குறைவாக உள்ளதாகவும் கண்டுள்ளார் என்றால் தெரியவில்லை.

10) நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் தவறு இருப்பதாக நான் ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய பூமியையும், 1ம் பிரதிவாதி பூமியையும் நில அளவையர் வைத்து எல்லை நிர்ணயம் செய்தால்தான் வழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்றால் சரியல்ல. அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யாமல் வழக்கு பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

11) 1ம் பிரதிவாதி தான் கிரையம் பெற்ற சொத்துக்களை அனுபவிப்பதில் நான் இடையூறு செய்யக்கூடாது என ஒரு எதிர்கோரிக்கை வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எல்லை நிர்ணயம் செய்யாதவரை தற்போது உள்ள நிலையிலேயே நானும், 1ம் பிரதிவாதியும் அவர் அவர் பூமியை அனுபவிக்கவேண்டும் என்றும், அதனால் இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் எதிர்கோரிக்கை அனுமதிக்கதக்கது என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் எதற்காக அரசு அதிகாரிகளான 2 மற்றும் 3 பிரதிவாதிகளை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் எங்கள் பூமியில் 1ம் பிரதிவாதி பிரச்சினை செய்ததால் வழக்கில் சேர்த்துள்ளேன். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் என் சொத்தில் எவ்வித இடையூறு செய்யவில்லை என்றால் சரிதான். எங்களுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் உள்ள தனிப்பட்ட பிரச்சினையில் 2 மற்றும் 3 பிரதிவாதிகளை தேவையில்லாமல் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். எனது வழக்குரையில் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு மூலம் குறிப்பிடவில்லை என்றும், அவர்களுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கோரவில்லை என்றும், சொன்னால் சரிதான்.

இவ்வழக்கிற்கு 2 மற்றும் 3 பிரதிவாதிகள் அவசியதரப்பினர் அல்ல என்றும், 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடிக்குரியது என்றும், சொன்னால் சரியல்ல.